பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு இ–சேவை மைய கட்டிடத்தை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி சிவசங்கர், மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி. ஆகியோர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர். இதில் மாவட்ட ஆட்சியர் கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், நகராட்சி தலைவர் அம்பிகா ராஜேந்திரன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் கவிதா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ராஜ்குமார், பெரம்பலூர் வட்டாட்சியர் சரவணன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தில் ஒன்றிய அரசின் அரசைக் கண்டித்து நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் சிறப்புரையாற்றினார். உடன் தலைவருமான என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.மறைமலை வேதாரண்யம் நகரக் கழகச் செயலாளர் மா.மீ.புகழேந்தி, வேதாரண்யம் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் உதயம் வே.முருகையன், என்.சதாசிவம் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்ச் செயலாளர்கள் உள்ளிட்டோர் உள்ளனர்.

அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

மோடி அரசைக் கண்டித்து கண்டன பொதுக்கூட்டம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் - வி.பி.இராஜன் - கவிச்சுடர் கவிதைப்பித்தன் சிறப்புரை!

அரியலூர், பிப். 12 - அரியலூர் மாவட்ட திமுக சார்பில் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு அநீதி இழைத்த மோடி அரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் -அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் ஜெயங்கொண்டம் சன்னதில் தெருவில் நடைபெற்றது. நகர கழக செயலாளர் வெ.கொ.கருணாநிதி வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், லதாபாலு, மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர்.எம். பொய்யாமொழி, ஆர்.எம்.அன்பழகன், இரா.பாலு, வி.எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கண்டன பொதுக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் வி.பி.இராஜன், மாநில கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைபித்தன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தலைமை கழக பேச்சாளர் குடந்தை இராமலிங்கம், கழக சட்டத்திட்ட திருத்த குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், சட்ட மன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், தலைமைக் கழக பேச்சாளர் இளஞ்செழியன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் பேசியதாவது: -

இன்றைக்கு மோடி அரசாங்கம் நம்முடைய வரிப் பணத்தை திருடிக் கொண்டு நமக்கு கொடுக்க வேண்டிய வரிப்பணத்தை கொடுக்காமல் ஏமாற்றி கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது!

தற்போது தமிழ்நாட்டின் மத கலவரத்தை உண்டாக்கும் வகையில் திருப்பரங்குன்றத்தை இந்து அமைப்புகள் கையில் எடுத்துள்ளது. திருப்பரங்குன்றதில் இஸ்லாமிய பெருமக்கள் அங்கே காலம் காலமாக வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள் இந்த பக்கம் முருகனை வழிபடுகின்றனர் நம்முடைய தமிழ் மக்கள். இதில் எந்த பிரச்சினையும் இதுநாள் வரையில் கிடையாது இப்பொழுது புதிதாக அயோத்தி பிரச்சனையைப் போன்று தமிழ்நாட்டில் மதக் கலவரத்தை உண்டாக்கலாம் என்று இஸ்லாமியர்கள் மீது வெறுப்புணர்வை தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தலாம் என்று நினைத்துக்கொண்டு அங்கே ஒரு பிரச்சினையை கிளப்பிப் பார்த்தார்கள், ஆனால் பொது மக்களிடத்தில் அவர்களின் ஏமாற்று நாடகம் எடுபடவில்லை. இன்றைக்கும் பல்வேறு கோயில்களுக்கு திருவிழா நடத்துகின்ற பொழுது அதற்கான ஒருநாள் பங்களிப்பை இஸ்லாமியர்கள் பல கிராமங்களில் செய்துவருகின்றனர், இதுநாள் வரை நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

இது தந்தை பெரியாருடைய மண், பேரறிஞர் அண்ணாவினால் பண்படுத்தப்பட்ட மண், தலைவர் கலைஞர், நம்முடைய கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் இப்படி பதற்றத்தை ஏற்படுத்தி ஏதாவது கலவரம் செய்யலாம் என நினைக்கிறார்கள். அது ஒருபோதும் நம் மண்ணில் நடக்காது. மதுரைக்கு அறிவித்த எய்ம்ஸ் மருத்துவமனைக்கான நிதி ஒதுக்கீடு இதுவரையில் செய்யவில்லை, மதுரைக்கு மெட்ரோ ரயில் திட்டத்தில் நிதி ஒதுக்கவில்லை, ஆனால் மதுரையில் மத கலவரத்தை உண்டு பண்ண இந்து அமைப்புகள் முயற்சி செய்கிறார்கள் . திருப்பரங்குன்றம் பிரச்சனை வைத்து தனக்கு ஓட்டு வாங்கலாம் என்று சிந்தித்தால் இவர்களைவிட கடைந்தெடுத்த அயோக்கியர்கள் யாராவது இருக்க முடியுமா? என கேள்வி எழுப்பினார் .

பிஜேபி என்றாலே பொய்யர்களின் கூட்டம் தான். பிஜேபியின் மாநில தலைவர் ஊர் ஊராக நடை பயணம் சென்று திராவிட முன்னேற்ற கழகத்தை சேர்ந்தவர்கள் அதை செய்கிறார்கள் இதை செய்கிறார்கள் என ஊழல் பட்டியலை கொடுக்கிறேன் என்று கூறி வெறும் ட்ரங்க் பெட்டியை ஆளுநரிடத்தில் கொடுத்தவர் தான் இந்த அண்ணாமலை.

ஆனால் அண்ணாமலையின் உறவினர் வீட்டில் ஈடி ரையிடு நடத்தி பல ஆயிரம் கோடி ஊழல் நடைபெற்றதாக கூறுகிறார்கள். இவரெல்லாம் ஊழலை பற்றி பேசவந்துவிட்டார்.

மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்கிற பெயர் இல்லை தமிழ்நாட்டுக்கான திட்டம் இல்லை ஆனால் வருடா வருடம் நமக்கு கொடுக்க வேண்டிய பணம் இருபதாயிரம் கோடியை நமக்கு தராமல் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறது மோடி அரசு, வரவேண்டிய 20,000 கோடி கிடைத்தால் எவ்வளவு திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்த முடியும். தமிழ்நாட்டில் இந்த பொருளாதார நெருக்கடியிலும் பல்வேறு திட்டங்கள் மெல்ல மெல்ல செய்து கொண்டிருக்கின்ற சூழல் இருக்கிறது. அந்த திட்டங்களை எல்லாம் நாம் இன்னும் எளிதாக செய்து விட்டால் தமிழ்நாட்டு மக்களிடத்தில் திமுகவை அசைக்க முடியாது எப்படியாவது பணத்தை நிறுத்தியாவது அவர்களுக்கு ஏதாவது பண்ண முடியுமா என்று பார்க்கிறார்கள், ஆனால் நம்முடைய தளபதி அவர்கள் இருக்கிற பணத்தை வைத்துக் கொண்டு மக்களுக்கு எது தேவை எதை முன்னதாக செய்வது என்று பார்த்து பார்த்து செய்து கொண்டிருக்கின்ற காரணத்தினால் தான் பொதுமக்கள் நம்முடைய தலைவர் பக்கம் திரண்டு நிற்கிறார்கள்.

மற்ற மாநிலங்களில் நம்முடைய முதல்வர்வரை பின்பற்றுவது ஒரு பக்கம் என்றால் உலக நாடுகளின் தலைவர்கள் நம்முடைய முதல்வருடைய திட்டத்தை பார்த்து பின்பற்றுகின்ற சிறப்பான ஆட்சி நம்முடைய முதல்வர் ஆட்சி. இந்த மோடி மஸ்தான் கூட்டத்திற்கு இந்தியாவில் கொள்கை ரீதியாக தத்துவார்த்த ரீதியாக இருக்கின்ற ஒரே எதிர் கட்சி நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் தான். நம்முடைய முதல்வர் தளபதி மு.க ஸ்டாலின் அவர்கள் தான் எதிர்த்து நின்று குரல் கொடுக்கின்ற ஒரே தலைவராக இருக்கிறார். எனவே ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் பிஜேபியை எதிர்த்து குரல் கொடுக்கின்ற இயக்கம் நம்முடைய திராவிட முன்னேற்ற கழகம் எதிர்த்து குரல் கொடுக்கின்ற தலைவர் நம்முடைய தலைவர் தளபதிக்கு நாம் எப்போதும் உறுதுணையாக இருக்க வேண்டும் பிஜேபிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய காலத்தை நாம் நெருங்கிக் கொண்டிருக்கின்றோம் அதற்கு நம் தலைவர் தலைமையில் நாம் ஒன்றுகூடுவோம், அணி திரளுவோம் என்று பேசினார்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்பிரமணியன், ஜெயங்கொண்டம் சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளர் கலாசுந்தரமூர்த்தி, ஒன்றிய கழக செயலாளர் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், மா.அன்பழகன், சக்கரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், நகரக் கழக செயலாளர் இரா.முருகேசன், பேரூர் செயலாளர்கள் ப.கோபாலகிருஷ்ணன், அ.அல்போன்ஸ், நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் மலர்விழி ரஞ்சித்குமார், மார்க்ரேட் அல்போன்ஸ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தெய்வ.இளையராஜா, இரா.ராமராஜன், க. தர்மதுரை, என்.ஆர். ராமதுரை, தங்க.ராமகிருஷ்ணன், ஆதி. இளங்கோவன், சி. அந்தோணிசாமி, பானுமதி ராஜேந்திரன், எம்.ஜி. ராஜேந்திரன், கே. சி. லூயிகதிரவன், மீனா சாமிநாதன், இரா. ரவிக்குமார் இரா.குலோத்துங்கன், மருத்துவர் செ. இளஞ்செழியன், வை. முருகானந்தம், க.கருப்பு சாமி, க.செல்வராஜ், ம. ஜெயக்குமார், பொன். செல்வம், க.அருண்ராஜா, க.இளங்கோவன், மருத்துவர் செ.சஞ்சய்குமார், ஜோ.வின்சென்ட்ராஜா மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள், கழக தோழர்கள் கலந்து கலந்துகொண்டனர்.

இறுதியாக மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் மு.கணேசன் நன்றி கூறினார்.

அறிஞர் அண்ணா நகர் காவல் செக் போஸ்ட் அருகில் மருதமலைக்குச் செல்லும் பக்தர்களுக்கு கோவை – 35 வது வட்டக் கழகத்தின் சார்பாகவும் அறிஞர் அண்ணா நகர் நலச்சங்கத்தின் சார்பாகவும் கம்பீர சித்தி விநாயகர் திருக்கோயிலின் சார்பாகவும் அன்னதானம் வழங்கப்பட்டது. 35வது வட்டக் கழக அவைத்தலைவர் சோ துரைப்பாண்டியன் தலைமையில் 35 வட்டக் கழகச் செயலாளர் ஆர்.குமரேசன் அன்னதானத்தை தொடங்கி வைத்தார். வார்டு கவுன்சிலர் சம்பத் முன்னிலை வகித்தார். இதில் சந்திரலிங்கம், ரவி முரசு, சங்கர பாண்டியன், டீக்கடை குமார், சோனைசாமி சண்முகம், குணசேகரன், பெட்டிக்கடை சசி குமார், அன்பு நகர் நலச் சங்கத் தலைவர் ஜான், ஜூஸ் கடை கதிரவன், ஜான்சன் திருமதி நளாயினி, திருமதி நவநீதம், திருமதி கீதா மற்றும் மூங்கில் காடு ஓட்டல் வரதன் மற்றும் அவரது குடும்பத்தினர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கவிஞர் குடியரசு

பிப்ரவரி 12 (2002)

“திராவிட இயக்கத்தின் தீப்பொறிக் கவிஞராகவும், எரிமலைக் கனல் உமிழும் எழுச்சிக் கவிஞராகவும் திகழ்ந்தவர். தத்துவக் கவிஞர் குடியரசு.

“என் தலைமையில் பகுத்தறிவுப் பாடல்களை – இன உணர்வுக் கவிதைகளை வழங்கியவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் நினைவு கூரப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சோ.துரைப்பாண்டியன் தலைமை! சம்பத் எம்.சி. முன்னிலை! கோவை

35 வது வட்டம் அண்ணா நகரில் அன்னதானம்!

வட்டச் செயலாளர் ஆர்.குமரேசன் வழங்கினார்!

கோவை, பிப். 12 - அறிஞர் அண்ணா நகர் காவல் செக் போஸ்ட் அருகில் மருதமலைக்குச் செல்லும் ஆன்மீக பக்தர்களுக்கு கோவை 35 வது வட்டக் கழகத்தின் சார்பாகவும் அறிஞர் அண்ணா நகர் நலச்சங்கத்தின் சார்பாகவும் ஸ்ரீ கம்பீர சித்தி விநாயகர் திருக்கோயிலின் சார்பாகவும் அன்னதானம் வழங்கப்பட்டது.

35வது வட்டக் கழக அவைத்தலைவர் சோ துரைப் பாண்டியன் தலைமையில் 35 வட்டச் செயலாளர் ஆர். குமரேசன் அன்னதானத்தை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் வார்டு கவுன்சிலர் சம்பத் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வில் சந்திரலிங்கம் ரவி முரசு, சங்கர பாண்டியன், டீக்கடை குமார், சோனைசாமி, சண்முகம், குணசேகரன், பெட்டிக் கடை சசிகுமார், அன்பு நகர் நலச் சங்கத் தலைவர் ஜான், ஜூஸ் கடை கதிரவன், ஜான்சன் திருமதி நளாயினி, திருமதி நவநீதம், திருமதி கீதா ஆகியோர் அன்னதானத்தில் கலந்துகொண்டு மருதமலைக்குச் சென்ற ஆன்மீக பக்தர்களுக்கு உரிய மரியாதை செலுத்தினர்.

மேலும் அன்னதான நிகழ்ச்சிக்கு அனைத்து வகையிலும் உதவிய மூங்கில் காடு ஓட்டலின் மேலாண்மை இயக்குனர் வரதன் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு வந்திருந்த அனைவரும் பாராட்டி கௌரவித்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மாங்காடு எம்.வி. சோலையப்பன்

பிப்ரவரி 12 (1972)

கழகம் துவக்கிய காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்று, காங்கிரஸ் ஆட்சியில் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகி தமது பகுதியில் கழகம் வளர்த்த தளகர்த்தர்களில் ஒருவர்.

தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பையும் பெற்றவர்.

மாங்காடு பேரூராட்சி தலைவராகவும் – குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். கழகத்தின் முதல் ஒன்றியப் பெருந்தலைவர் என்ற சிறப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். தன் இறுதிகாலம் வரை கழகத்திற்காக பாடுபட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.